தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 12, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 321, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

321—

நீர்த்தேக்கம்

***9811—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், பாலவிடுதி கிராமத்தில் செந்தலைவாழ்கரடு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி கிராமத்தில் செந்தலைவாழ்கரடு ஏரி அமைக்கும் பணி திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். தமிழக மக்களின் நலனைக் காக்கும் அம்மா அவர்கள் ஆட்சியில் எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில், கடவூர் ஒன்றியத்தில் மயிலம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுப்படுத்தி கூடுதல் படுக்கை வசதிகளுடன் ஸ்கேன் வசதி, எக்ஸ்ரே வசதி செய்து கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வால்மீகி அம்பேத்கர் திட்டத்தின் மூலம் 134 வீடுகள் கட்டிக் கொடுத்த அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடவூர் ஒன்றியத்தில் எந்தவொரு ஆற்றுப் பாசனமும் இல்லாமல் வானம் பார்த்த பூமியாக உள்ளது. ஆகையால் அங்கு வசிக்கும் மக்கள் மழை நீரை நம்பித்தான் வாழ்கின்றனர். கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களின் அரசு சுமார் 200 கிராமங்களில் வசிக்கும் மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், 1,500 ஏக்கர் விவசாய விளை நிலங்களில் பயிர் செய்யும் வகையிலும் நடப்பு ஆண்டிலேயே இத்திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி கிராமத்தில் செந்தலைவாழ்கரடு ஏரி அமைக்கும் பணி ரூபாய் 28.46 இலட்சத்திற்கு 1990-91 ஆம் ஆண்டு

மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நில நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 2.20 ஏக்கர் வன நிலங்கள், 8.62 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் 2.36 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய உள்ளது. சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை, பொதுப் பணித் துறைக்கு குத்தகை அடிப்படையில் வன நிலங்களை ஆர்ஜிதம் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்ட மதிப்பீடு 2002-2003 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூபாய் 86 இலட்சமாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 82.56 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு பெறப்பட்டிருக்கின்றது. இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைக்கேற்ப இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஆர். சசிகலா.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 322, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

322—

ஏரியைத் தூர்வாருதல்

***17791—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் ஊராட்சிக்குட்பட்ட பெரிய ஏரியைத் தூர்வார அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS